விருதுநகரில் தி.மு.க. இளைஞர் அணி மண்டலம் 8 மாவட்ட மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இளைஞர் அணி சி.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் கலந்து கொண்டு அமைப்பாளர்களுக்கு விருது வழங்கினார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அகில இந்தியப் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி பிறந்தநாள்!

அனைவரையும் உள்ளடக்கிய 'INDIA' உருவாக்கிட ஒன்றிணைந்து நிற்போம் !

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஆக. 13- மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்களின் பிறந்தநாளை யொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

நீதி மற்றும் சமத்துவத்திற்காக அயராது பாடுபட்டு வரும் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். முற்போக்கு விழுமியங்களுக்கென அர்ப்பணித்துக்கொண்ட உங்கள் வாழ்வு அனைவருக்கும் ஊக்கமாக விளங்குகிறது.

பிரிவினையை விட ஒற்றுமைக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் அனைவரையும் உள்ளடக்கிய INDIAவை உருவாக்கிட ஒன்றிணைந்து நிற்போம்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

உடலுறுப்பு தானம் செய்வதில்

இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்!

'அனைவரும் உடலுறுப்பு தானம் செய்வோம்' என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 14 – உடலுறுப்பு தானம் செய்வதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது என்றும் அனைவரும் உடலுறுப்பு தானம் செய்வோம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-

உடலுறுப்பு தானம் என்பது தமிழ்நாட்டில் ஓர் இயக்கமாவே செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே மிகப்பரந்த மனதுடைய மக்களும், மிகச்சிறந்த மருத்துவக் கட்டமைப்பும் இங்கு இருப்பதால் தான் உறுப்புகளை தானம் செய்வதில் இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளோம்.

தீயும் மண்ணும் தின்னும் உடலைப் பிறர்க்களித்து அவர்களுக்கு வாழ்வளிக்க முன்வருவோம்! அனைவரும் உடலுறுப்பு தானம் செய்வோம்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய பல்கலைக்கழகங்களில் பிற்படுத்தப்பட்டோர் – தாழ்த்தப்பட்டோருக்கு

இழைக்கப்படும் அநீதியைக் கண்டித்து திராவிடர் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக. 14 - ஒன்றிய அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்று மண்டல் ஆணையத்தின் பரிந்துரையில் குறிப்பி டப்பட்டு, சமூக நீதிக்காவலர் வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆனால், அதற்குப்பின்னர் ஒன்றிய அரசின் நிறுவன ங்களில் பொதுத்துறை நிறுவனங்களில் பிற்படுத்த ப்பட்டவர்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு முறையாக பின்பற்றப்படா மல் பிற்படுத்தப்பட்டவ ர்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய பாஜக அரசு திட்டமிட்டு பிற்படுத்தப்ப ட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கு உரிய ஒதுக்கீட்டினை அளிக்காமல் வஞ்சித்து வருகிறது. மத்தியப் பல்கலைக் கழகங்களில் பிற்படுத்தப்ப ட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் சமூக அநீதியைக் கண்டித்து சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் நேற்று முன்தினம் (12.8.2023) மாலை திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் எழுச்சியுடன் நடைபெற்றது.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் கழகப்பொறுப்பாளர்கள் தனி வாகனங்களில் பெருந்திரளாக திரண்டு ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். தென் சென்னை மாவட்டத் தலைவர் இரா.வில்வநாதன் வரவேற்புரை ஆற்றினார். கழகப்பொருளாளர் வீ.குமரேசன் கண்டன ஆர்ப்பாட்டத்தை தொடங்கிவைத்து கண்டன உரையாற்றினார். கழக வெளியுறவு செயலாளர் கோ.கருணாநிதி, கழகப்பிரச்சாரச்செயலாளர் வழக்குரைஞர் அ.அருள்மொழி கண்டன உரையாற்றினார்கள்.

திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தின் நிறைவாக சிறப்புரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழக மாநில, மாவட்டங்களின் பொறுப்பாளர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

தமிழ்நாடு தலையாட்டி பொம்மை மாநிலம் அல்ல! மீண்டும் மொழி புரட்சியை உருவாக்காதீர்!

ஒன்றிய அரசை எச்சரித்த முதல்வருக்கு நன்றி!

சென்னை கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

சென்னை, ஆக. 14 - சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டத்தில் மாவட்ட செய லாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 12.08.2023 சனிக்கிழமை அன்று, சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத்தலைவர் கோ. ஏகப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, ஜோசப்சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்: ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, கே. எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார் மற்றும் பரிதிஇளம்சுருதி,

மாவட்ட நிர்வாகிகள்: ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராஜன், பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக் கண்ணு, கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், சொ. வேலு. வி.சுதாகர், எஸ். ராஜசேகர், எஸ்.முரளி.

பொதுக்குழு உறுப்பினர்கள்: டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், பி.உதயசங்கர், சரிதா மகேஷ்குமார், வி. ரமேஷ் (எ) நீலகண்டன், ஆர்.கலைச்செல்வி, ஏ. பி.பூர்ணிமா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: டி.லோகேஷ், பாலமுருகன், ஜெகதீஷ், க. வினோத், ஜி.ஜே.பிரபு, ஆர்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, எல்.பி.எப். மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், பி. விஜய்குமார், எம்.விநாயகம், துரைக்கண்ணன், மா.அசோக்குமார், கு.கிருஷ்ண மூர்த்தி, ராஜா முகம்மது, பிரதீப்குமார், து.ஆயிரம், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் மற்றும் வட்டகழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

தீர்மானம்:1

முத்தமிழறிஞர் வழியில், கழகத் தலைவர் பாதையில் இயக்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்திட்ட வில்லிவாக்கம் கிழக்கு பகுதி அவைத்தலைவர் முனுசாமிதாஸ் அவர்களின் மறைவிற்கும், எழும்பூர் வடக்கு பகுதியை சார்ந்த மாவட்ட பிரதிநிதி பி.டி.பிரின்சிபால் அவர்களின் மறைவிற்கும் கொளத்தூர் கிழக்கு பகுதி 68-வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.ஆதவன் மணி அவர்களின் தந்தை திரைப்பட நடிகர் கோட்டை பெருமாள் அவர்களின் மறைவிற்கும், இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தும் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் ஆறுதலை தெரிவித்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம்: 2

ஆகஸ்ட் 7, நம்மையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு வங்கக்கரையோரத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் பேரணியில் சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் திரளாக பங்கேற்ற மாநில, மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகளுக்கும், சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கும், கழக செயல் வீரர்களுக்கும், முன்னோடிகளுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம்:3

இந்தி திணிப்பை தமிழ் நாட்டைத் தொடர்ந்து மேற்குவங்கம் கர்நாடகம் மற்றும் பல மாநிலங்கள் கடுமையாக எதிர்க்கின்ற நிலையில் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல இந்தி மொழியை எதிர்ப்பின்றி அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பேசியிருப்பது மற்ற மொழி பேசும் அனைத்து இன மக்களையும் இந்திக்கு கொத்தடிமையாக்கும் ஏதேச்சதிகார முயற்சி என்றுரைத்து.

தமிழ்நாட்டுக்கு வந்தால் தமிழ் தொன்மையான மொழி என்று நாக்கில் தேன் தடவுவதும்... டெல்லிக்குச் சென்றதும் மேற்சொன்னது போல நஞ்சை பரப்புவதும் பாஜகவின் பசப்பு அரசியல்.. இதைக் கேட்டு நடக்க தமிழ்நாடு ஒன்றும் தலையாட்டி பொம்மை மாநிலம் அல்ல என்று கடுமையாக சாடி.. மீண்டும் 1965 மொழி புரட்சி காலத்தை உருவாக்கி விடாதீர்கள் என்று ஒன்றிய அரசை எச்சரித்த கழகத் தலைவரை பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம்:4

கழகத் தலைவர் தலைமையில் காணொளி வாயிலாக நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தியதன் அடிப்படையில் ஓராண்டு முழுவதும் நடத்தப்பட வேண்டிய கலைஞர் நூற்றாண்டு நிகழ்வுகளை மாவட்ட கழகமும், சார்பு அணிகளும் தலைமை கழகம் வரையறுத்ததின் அடிப்படையில் பொறுப்பு ஏற்று கலைஞரின் பெருமையை அவரின் தியாகத்தை அவரின் சாதனைகளை ஒன்றியமே உற்றுநோக்கும் வகையில் விழாக்களை நடத்திட உறுதி ஏற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தமிழ்நாடு அரசு

விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒ.அ.எண். 29 / 2023 - 24 / தவஅ / நாள்: 11.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ). க(ம)ப. விழுப்புரம் வட்டம் அவர்களால், திட்டம் சாராப் பணிகள் 2023-24 -ன் கீழ் விழுப்புரம் (நெ). க(ம)ப. கோட்டத்தில் **(VPM 112)** ஒரு பணிக்கு இணையவழியில் ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **08.09.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **21.08.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது..

செ.ம.தொ.கி / 4462 / ஒப்பந்தப்புள்ளி / 2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க&ப வட்டம், விழுப்புரம்

தி.மு.க. மருத்துவ அணி மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்

மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் **15.08.2023** செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணி அளவில் காணொளி காட்சி வழியாக நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : 1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம்
2. மாவட்டம் மற்றும் தொகுதி அளவிலான நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்
3. அணியின் வளர்ச்சிப் பணிகள்

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் 14.08.2023

மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி

தனியார்க்கு உதவிட, குலசேகரப்பட்டணத்தில்

புதிய விண்வெளித் தளம் உருவாக்கப்படுமா?

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 14 - தனியார் நிறுவனங்கள் சிறிய செயற்கைக்கோள்களை சுற்றுப்பாதையில் செலுத்துவதற்கு தமிழ்நாட்டில் குலசேகரப்பட்டினத்தில் புதிய விண்வெளித் தளத்தை உருவாக்க ஒன்றிய அரசு முடிவு குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினர்

தனியார் நிறுவனங்கள் சிறிய செயற்கைக்கோள்களை சுற்றுப்பாதையில் செலுத்துவதற்குப் பயன்படும் வகையில், தமிழ்நாட்டில் குலசேகரப்பட்டினத் தில் புதிய விண்வெளித் தளத்தை உருவாக்க ஒன்றிய அரசு முடிவு செய்திருக்கிறதா?

அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் விண்வெளி நிலையம் நிறுவப்படுவதற்கான கால அவகாசம் என்ன?

உலகளாவிய சிறிய செயற்கைக்கோள் சந்தை மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 14 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது உண்மையா? அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும்

உலகளாவிய சிறிய செயற்கைக்கோள் சந்தையின் பெரும்பகுதியைப் பயன்படுத்துவதற்கு ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

ஒன்றிய அரசின் விண்வெளித்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

ஆமாம். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) இஸ்ரோவால் உருவாக்கப்பட்ட சிறிய செயற்கைக்கோள் ஏவுகணைகளை (எஸ்.எஸ்.எல்.வி) ஏவுவதற்காக தமிழ்நாட்டின் குலசேகரப்பட்டினத்தில் புதிய விண்வெளி நிலையம் அமைப்பதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு வரம்பு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அரசு சாரா நிறுவனங்களால் (NGES) ஏவுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான (ஸ்பேஸ் போர்ட்) விண்வெளி நிலையம் அமையவுள்ளது.

தமிழக அரசின் நிலம் கையகப்படுத்தும் பணி நடந்து வருகிறது. தற்போது அடையாளம் காணப்பட்ட 2350 ஏக்கர் நிலத்தில் 2000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்ததும் புதிய தளத்தில் ஏவுதளம் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்கால கணிப்புகள் உட்பட உலகளாவிய சிறிய செயற்கைக்கோள் சந்தையின் சரியான அளவு ஒரு சிக்கலான விகவும் விவாதத்திற்குரிய விஷயமாகும் பல உலகளாவிய ஆலோசனை நிறுவனங்கள் பல்வேறு தற்போதைய மற்றும் வெவ்வேறு அடிப்படை அனுமானங்களில் எதிர்கால நிலையை கணிக்கின்றன.

இருப்பினும் இது போன்ற கணிப்புகள் சிறிய செயற்கைக்கோள் சந்தை வரும் ஆண்டுகளில் வளர்ச்சியடையும் என்ற பொதுவான போக்கைக் குறிக்கிறது.

உலகளாவிய சிறிய செயற்கைக்கோள் சந்தையைப் பொறுத்தவரை ஒன்றிய அரசு பல்வேறு முன்னேற்றங்களைத் தொடங்கியுள்ளது. சிறிய செயற்கைக்கோள் பயணத்தை செயல்படுத்தும் இந்திய சிறு விண்கலம் (IMS) மற்றும் இந்திய நானோ செயற்கைக் கோள் (INS) விண்கலங்களை

ISRO வெற்றிகரமாக நிரூபித்துள்ளது IMS1 விண்கல தொழில்நுட்பம் NSIL வழியாக இந்திய பயன்பாட்டுக்கு மாற்றப்பட்டது.

மேலும் செலவு குறைந்த மற்றும் தேவைக்கேற்ப சிறிய செயற்கைக் கோள்களை ஏவுவதற்கான தேவையை பூர்த்தி செய்ய சிறிய செயற்கைக்கோள் ஏவுகணை வாகனத்தையும் (SSLV) இஸ்ரோ உருவாக்கியுள்ளது. INSPACE சமீபத்தில் இந்திய பயன்பாட்டுக்காக சிறிய செயற்கைக்கோள் ஏவுதல் வாகனத்தின் (SSLV) தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் ஆய்வு!

பல்லபுரம், ஆக. 13 - பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குரோம்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் புதிய கட்டிடப் பணிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ நேரில் ஆய்வு செய்தார். குரோம்பேட்டை அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 6.89 கோடி மதிப்பீட்டில் 60 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மருத்துவமனை கட்டிடப் பணிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி பொதுப்பணித் துறை அதிகாரியுடன் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது கட்டிட பணிகள் குறித்து அதிகாரியிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்ட பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி கூறியதாவது குரோம்பேட்டை அரசு மருத்துவமனையை பல்லாவரம் தொகுதி தாம்பரம் தொகுதி சோழிங்கநல்லூர் தொகுதி ஆலந்தூர் தொகுதி ஆகிய தொகுதிகளில் சுற்றியுள்ள புறநகரைச் சேர்ந்த பகுதி மக்கள் பெரிதும் பயன்படுத்தி வருகிறார்கள் தற்போது மகப்பேறு மற்றும் குழந்தை நல மருத்துவ மனைக்கான புதிய கட்டிட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன இந்தப் பணிகளை பொதுப் பணித்துறை அதிகாரிகள் தலைமை மருத்துவர் ஆகியோருடன் நேரில் வந்து ஆய்வு மேற்கொண்டோம் மகப்பேறு மருத்துவமனை பணிகளை 2 மாதகாலத்திற்குள் முடித்து நவம்பர் மாதம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருகிற மாதிரி விரைந்து பணிகளை மேற்கொள்ளுமாறு அதிகாரியிடம் கேட்டுக் கேட்டுக்கொண்டேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 1496 மகளிர் சுய உதவி குழுவினருக்கு ரூபாய் 104கோடி மதிப்பிலான கடனுதவிக்கான காசோலைகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கிய போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்